Strike in Bharat Heavy Electricals at Tiruverambur.

* 356. *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there was strike in Bharat Heavy Electricals at Tiruverambur on 30th July 1971 and subsequent days;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) whether settlement has been reached on the issues raised and subsequent action of the Management?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி, பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ் தொழிலாளர் முன்னேற்ற சங்கமும், திருச்சிராப்பள்ளி, பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ் தொழிலாளர் சங்கமும், 1970-71 கணக்கு ஆண்டிற்கு தொழிலாளர்களின் மொத்த ஊதியத்தில் 40 சத விகிதம் பூரிப்பூதியமாக வழங்கப்படவேண்டுமென்று கோரினர். நிர்வாகத்தினர் 20 சதவிகிதம் பூரிப்பூதியம் வழங்கப்படும் என்று அறிவித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, மேற்சொன்ன தொழிலாளர் சங்கங்கள் இரண்டையும் சேர்ந்த தொழிலாளர்கள், 29—7—71, 30—7—71, 31—7—71 ஆகிய நாட்களில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர்.

(உ) இது குறித்து 5—8—71 அன்று என்னால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது; இப்பேச்சு வார்த்தைகளில் நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் பங்கு கொண்டனர். இப்பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து தொழிலாளர் நல ஆணையாளர் தகவல் ஒன்றை நிர்வாகத்தினருக்கு அனுப்பினர். அதன்கண், தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்படும் பண்டிகை முன்பணத் தொகை ரூ. 100-ஐ கூடுதலாக்கித் தருமாறும், இத்தொகையை திரும்பச் செலுத்தும் முறையையும் கால அளவையும் பின்னர் விவாதித்து முடிவு செய்வதற்கு விட்டுவிடுமாறும் நிர்வாகத்தினருக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : திருவெறும்பூரில் இருக்கக்கூடிய பி.எச்.இ. தொழிற்சாலையில் ஆறுயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். சென்ற தடவை 3½ கோடி ரூபாய் லாபம் கிடைத்தபோது 20 சதவிகிதம் போனஸ் தரப்பட்டது. இப்போது ஐந்து கோடி ரூபாய் லாபம் கிடைத்த போதும் அதே தொகை கொடுக்கப்பட்டதை எதிர்த்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு முன்பாக 100 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது அந்த 100 ரூபாய் திரும்பப் பிடித்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதை போனசாகக் கருதி அவர்களுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1971 டிசம்பர் 14]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தொழிற்சாலைகளில் தொழிற்சங்கத் தலைவர்களும், நிர்வாகிகளும் சேர்ந்து முடிவுக்கு வந்த ஒப்பந்தங்களை முறைப்படி பின்பற்றினால்தான் ஒப்பந்தங்களுக்கு மரியாதையும், நல்ல விளைவும் ஏற்படும். பாரத் ஹெவி எலெக்ட்ரிகல் கம்பெனி தொழிலாளர்களுக்கு 100 ரூபாய் அதிகமாக அட்வான்சாகத் தரப்பட வேண்டுமென்று தொழிற்சங்கத்தால் கேட்கப்பட்டது. அப்படி அட்வான்சாகத் தரப்பட்ட தொகையை இப்போது பிடித்துக் கொள்ளுகிறார்கள். எனவே அதை போனசாகக் கருத இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று வாக்குறுதி கொடுத்த பின்னர் ஒரு குறிப்பிட்ட சங்கத்தைச் சேர்ந்த 23 தொழிலாளர்களுக்கு சார்ஜ் ஷீட், வேலை நிறுத்தம் செய்தார்கள் என்ற காரணத்தைக் காட்டி, கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இந்த அரசு, தொழிலாளர்கள் தவறு செய்து, அதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தவர்கள் மீது பின்னர் முதலாளிகள் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் கூட இறுதியாக நடவடிக்கையைக் கைவிடுமாறு சொல்லி வருகிறோம். அந்த வகையில் பெரும்பாலும் நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு வருகிறது. இத் தொழிலாளர் நிலை பற்றியும் அரசு பரிசிலனை செய்யும்.

Prosperity Brigade

* 357 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether any official of the Central Government visited this State to study the Prosperity Brigade and its work about the 5th August 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) தமிழகத்தில் இயங்கிவரும் சீரணித் திட்டத்தைப் பற்றியும் அதன் செயல் முறைகளைப் பற்றியும் நேரில் பார்த்து தெரிந்துகொள்ள மத்திய அரசிலிருந்து பொதுநலத் தொடர்பு இயக்குநர் டாக்டர், பால் சௌத்ரி அவர்கள் 4—8—1971 அன்று சென்னைக்கு வருகை தந்தார்.

திரு. ரா. ரா. முனுசாமி: சென்னைக்கு வந்த மத்திய அதிகாரியை மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அழைத்துச் சென்று சீரணி மூலமாகத் தமிழகம் எங்கும் செய்யப்பட்ட வேலைகளைக் காட்டி தமிழகத்தில் சீரணி வேலைகள் எந்த